REGD: No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

நெருக்கடி கட்டம் உருவாகிறது?

மேற்கு பாகிஸ்தானை ஒரே உறுப்பாக இணைப்பதை எதிர்ப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், பலுசிஸ்தானம் உட்பட சிந்து நதிக்கு வடக்கிலும், வட மேற்கிலும் உள்ள பாகிஸ்தான் பகுதிகளுக்கும் ஆப்கானிஸ்தான் உரிமை கொண்டாடுகிறதாம்!

ஆப்கானிஸ்தானத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக இரண்டு ஆசிய நாடுகள் ஏற்கெனவே வாக்களித்துள்ளனவாம்.

இந்த அபிவிருத்திகளின் விளைவாக பாகிஸ்தான்—ஆப்கன் உறவு நிலை மிக நெருக்கடியான ஒரு கட்டத்தை அடைந்துவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மலர் 2] சென்னை: பங்குனி 31உ புதன் (13—4—55) ★ ★ வெளியீடு: சித்திரை 1உ வியாழன் (14—4—55) [இதழ் 258

கடைகள் தீக்கிரை! குடியிருப்புகள் நாசம்!

பெயர்ப் பலகைகள் உடைத்தெறியப்பட்டன!

3000 வங்காளிகள் வங்காளம் திரும்பினர்!

வங்காளிகளுக்கு எதிராக அசாம் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

அசாம் மாநிலத்தில், மேற்கு வங்கத்தை ஒட்டியுள்ள கோல்பாரா மாவட்டத்தில், வங்காளிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டு வருகிறது.

வங்காளிகளின் கடைகளுக்கு முன்பாகத் தொங்கவிடப்பட்டிருந்த 'பெயர்ப் பலகைகள்' உடைத்தெறியப்பட்டன.

வங்காளிகளின் கடைகள், ஆயுதம் தாங்கிய காங்கிரஸ் கட்சியினரால் சூறையாடப்பட்டன.

அங்கு இருக்கும் பாகிஸ்தானிலிருந்து குடியேறியுள்ள கிழக்கு வங்க அகதிகளின் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டன.

'மேலும் பலமான தாக்குதல் நடத்தப்படும்,' என, அங்குள்ள வங்காளிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

அங்குள்ள பல கிராமங்கள், மக்கள் சஞ்சாரமின்றி, எரிக்கப்பட்ட, இடிக்கப்பட்ட குடியிருப்புகளுடன் பாழடைந்து காட்சி தருகின்றன.

ஏற்கனவே மூவாயிரம் வங்காளிகள், எல்லையைக் கடந்து வங்காளத்திற்குள் ஓடிவந்துள்ளனர்.

போக்குவரத்து வசதி குறைவினால், பல புதிய அகதிகள், இரண்டு புகைவண்டி நிலையங்களில் வங்காளத்துக்குத் திரும்ப வர காத்துக்கிடக்கின்றனர்.

போங்காய் கான் என்ற புகைவண்டி நிலைய ஊரில் மட்டும் 300 வங்காளிகளின் கடைகள் காங்கிரஸ் கட்சியினரால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

அங்குள்ள சிறு தொழிற்சாலை ஒன்றின் தொழில் நிர்வாகியாக வேலை பார்த்துவந்த வங்காளி தாக்குண்டார்; அதன் விளைவாக இரயில்பாதையில் உட்கார்ந்து கொண்டு இரயில் போக்குவரத்தை வங்காளிகள் தடுத்தனர். அதற்கு எதிராக அசாமியர்களும் பலம் மிகுந்த ஆர்ப்பாட்டம் செய்தனர்.

காரணம் என்ன?

அசாமிலுள்ள கோல்பாரா மாவட்டத்தின் சிறு பகுதியை, அங்கு வங்காள மொழியினர் இருப்பதைக் காரணங்காட்டி, தனக்கு வேண்டுமென உரிமை பாராட்டுகிறது மேற்கு வங்கம்.

அடுத்த மே மாத முதலில் மாநில திருத்தக் குழு, அங்கு செல்ல இருக்கிறது.

அரசாங்க நடவடிக்கை

கடந்த ஒரு வாரமாக நிகழ்ந்து வரும் வங்காளிகளுக்கு எதிரான பலாத்காரச் செயல்களை ஒடுக்கி, அமைதியை நிலைநாட்ட 300-க்கு அதிகமான ஆயுதந்தரித்த போலீஸ் பணிபுரிந்து வருகிறது.

நிலைமையை சீர்படுத்த, இராணுவமும் அழைக்கப்பட்டு இருக்கிறது.

★

பலாத்காரத்தில் ஈடுபட்டது எவர்?

"போங்காய்கானிலும், மற்ற பகுதிகளிலும் செய்யப்பட்டுள்ளதைக் கண்டு வெட்கப்படுகிறேன். வங்காளியர் கடைகளைக் கொள்ளையிட்டும், அவர்களை நேருக்கு நேராக வசை பொழிந்தும், வங்க மொழி பெயர்ப் பலகைகளை உடைத்தெறிந்தும், காங்கிரஸ் ஊழியர்கள் நடந்து கொண்டதின் மூலம், காங்கிரசின் நல்ல பெயருக்கு மாசு படுத்தியும், அதன் நோக்கத்திற்குக் கேடு சூழ்ந்தும் உள்ளனர். அகதிகள் உள்ளிட்ட வங்காள மக்களிடம் நம்பிக்கை ஏற்பட, காங்கிரஸ் ஊழியர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்."

இவ்வாறு, அசாம் காங்கிரஸ் குழு தலைவர் மகேந்திரமோகன் சவுத்திரி, கோல்பாரா கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

★

வங்க காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு

"அசாமிலிருக்கும் வங்காள மொழி பேசும் மக்களைப் பாதுகாக்க அசாம் அரசாங்கம் தவறிவிட்டது."

"வங்காள சிறுபான்மையோர் குறித்தோ, வங்காள மொழி பேசும் பகுதியை வெட்டி ஒட்டுவது பற்றியோ நான் பேசப்புகவில்லை; இந்தியக் குடிமகன் என்ற முறையில் அசாமில் இருக்கும் ஒவ்வொரு வங்காளியும் சமஉரிமையும், வசதியும் பெற்று வாழும் வகையில் பாதுகாக்கப்பட வேண்டியது அசாம் அரசாங்கத்தின் கடமையாகும் என்ற ஒன்றே ஒன்றைக் குறித்துத்தான் நான் குறிப்பிடுகிறேன்."

"இத்துறையில், அசாம் அரசாங்கம் பெரும் தவறு செய்துவிட்டிருக்கிறது."

"என்னுடைய பொறுப்பு எனக்குத் தெரியும்; மற்றொரு மாநில காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் இக்குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன்."

"கடந்த பதினைந்து நாட்களாகவே, நிகழ்ந்துள்ள இழிவு நிலைக்கான நிலைமை வளர்ந்து வந்திருக்கிறது. அசாமின் நிலப் பரப்பைக் காக்கிறோம் என்ற போர்வையில், வெளிப்படையாகவே வங்காளியர் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன; ஆண் - பெண் - சிறுர் என்ற வேற்றுமை பார்க்காமல் வங்காளிகள் தாக்கப்பட்டுள்ளனர்; பெண்கள்கூட கொடுமைபடுத்தப்பட்டுள்ளனர்; ஒரே சொல்லில் சொல்ல வேண்டுமானால், சீர்கேட்டை உண்டாக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்றே சொல்ல வேண்டும்."

வங்க காங்கிரஸ் தலைவர் அத்புல்லா கோஷ், அசாம் அரசாங்கத்தின் மீது மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

முதல் மந்திரி ராய் அவர்களும், பண்டித நேரு அவர்களுடன் 'போன்' மூலம் மேற்படி சம்பவம் குறித்துப் பேசிவருகிறாராம்!

சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தால்!

உயிருக்கு ஆபத்து ஏற்படுமாம்!

பெங்களூர், ஏப். 12—

'இனம் ஒழிப்பு போன்ற சீர்திருத்தச் சட்டங்களை கொண்டுவந்தால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும்' என்று, மைசூர் மாநில நிலவரி அமைச்சர் கே. நஞ்சப்பாவுக்குப் பல மிரட்டல் கடிதங்கள் கையெழுத்திடப் பெறுமல் வந்துள்ளதாக அமைச்சரே தெரிவித்திருக்கிறர்.

"தான்தோன்றித் தலைமை! 'ஆமாம் சாமி' தொண்டர் குழாம்!"

"மக்களாட்சி நிறுவன அமைப்புக்கு மாறுபட்டது"

"டாக்டர் அம்பேத்கார் போக்கால் நிறுவனம் சீர்குலைந்தது"

அகில இந்திய ஷெட்யூல் வகுப்பு சம்மேளனத்தில் இருந்து விலகும் ராஜ்போஜ் கருத்துரை

பூனு, ஏப். 11—

"ஒரு தனிப்பெரும் தலைவரால் நடத்தப் பெற்றாலும், அவரைப் பின்பற்றும் 'ஆமாம் சாமிகள்' எவ்வளவோ உண்மையும் தியாக உணர்வும் கொண்டவர்களாக இருந்தாலும், தனித் தலைவரின் ஆணைக்கு எதிராக பலரின் கருத்து வழி இயங்கும் ஒரு 'மக்களாட்சி நிறுவன'த்தின் இடத்தை, எந்த ஒரு ஸ்தாபனமும் பெற்றுவிட முடியாது.

"தலைவர் என்ற பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு, தான் கட்டளை இடவும்—அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவரை ஏன் என்று கேட்காமல் கீழ்ப்படிந்து, அக்கட்டளையை நிறைவேற்றுவதையுமே, டாக்டர் அம்பேத்கார் விரும்புகிறர்.

"ஆனல், டாக்டர் அம்பேத்காரால் துவங்கப்பட்ட இயக்கமானது உயிரற்றுப் போனதுடன் மட்டுமன்றி, தீவிரமாக உருக்குலைந்தும் வருகிறது.

"சம்மேளனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக சிவராஜ் அவர்கள் இருந்துவரும்பொழுதே, டாக்டர் அம்பேத்கார், தன்னைத் தானே தலைவரென அண்மையில் அறிவித்துக்கொண்டார். அதுவுமன்றி, சம்மேளனச் செயற்குழு உறுப்பினர்கள் அறியாத நிலையிலேயே, தன்னைத் தலைவராகக்கொண்டு ஒரு சட்ட திட்டத்தை அச்சடித்துக்கொண்டார். இதன் பலனுக, இரண்டு தலைவர்களை எதிர்நோக்கும் ஒரு வியப்பிற்குரிய நிலைமை எனக்கு ஏற்பட்டுவிட்டது. அதனுல் நிறுவனத்தைவிட்டே வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்."

அகில இந்திய ஷெட்யூல் வகுப்புசம்மேளனம் துவக்கப்பட்ட 1942-ம் ஆண்டு முதல், அதன் பொதுச் செயலாளராகப் பணி புரிந்து வந்த பி. என். இராஜ்போஜ் அவர்கள், மேற்கண்டவாறு டாக்டர் அம்பேத்காரின் போக்கையும், சம்மேளனத்தின் சீர்குலைவையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

அதுவுமன்றி, தனது பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக்கொண்டு, மேற்படி விலகலை, சம்மேளனத் தலைவரான என். சிவராஜ் அவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சம்மேளனத்தில் உள்ளுக்குள்ளாக வளர்ந்துவரும் நிலைமை கண்டு, தான் சில காலமாகவே மனவேதனை அடைந்து வந்ததாகவும், நாட்டு மக்களின் பெரும்பாலோரை விட்டு மெள்ள மெள்ள சம்மேளனம் விலகிக் கொண்டே போவதாகவும், அதே நேரத்தில் அதன் தனித் தலைவரான டாக்டர் அம்பேத்காரால் கட்சிக்குள்ளாக இருக்கும் ஜனநாயகப் பண்பு குலைக்கப்படுவதாகவும், அதன் விளைவாக கூட்டுத் தலைமையாலும் ஒத்துழைப்புச் செயலாலும் எழும் ஆர்வம் குன்றவும், பொதுமக்களிடம் இருந்துவந்த பிடிப்புத் தளரவுமான நிலைமை ஏற்பட்டுவிட்டதாகவும் இராஜ்போஜ் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் கோரிக்கை

ஏற்றுக்கொள்ள இயலாதாம்!

இலங்கையிலிருக்கும் இலங்கையரல்லாதார் பட்டியலை உள்ளடக்கிய ரிஜிஸ்தர் முடிவுறும் வரையிலும் இலங்கை சர்க்காரின் குடியேற்றச் சட்டங்களுக்கு திருத்தம் செய்வதை ஒத்திப் போடும்படி இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருந்த வேண்டுகோளுக்கு இலங்கை சர்க்கார் உத்தியோகபூர்வமாக மறுப்புத் தெரிவித்துவிட்டது.

'இந்தியாவின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று இந்தியாவிற்குத் தெரிவித்தாயிற்று' என்று இலங்கை அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறர்.

ஆந்திராவில் அணுசக்தி மூலப் பொருள்

ஆந்திர மாநிலத்தின் பல பகுதிகளிலும் "மானசைட்" எனப்படும் அணுசக்தி மூலப்பொருள் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதென்று பிரதமர் நேரு பண்டிதர் டெல்லி மக்கள் சபையில் அறிவித்திருக்கிறர். கிடைக்கக்கூடிய 'மானசைட்' அளவு எவ்வளவு இருக்கும் என்பது பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகக் கூறினர்.

இந்தியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில், உற்பத்தியான நிலக்கரியின் அளவு 1955 ஜனவரியில் 31,55,419 டன்னுக இருந்தது—1955 பிப்ரவரியில் 32,48,578 - டன்னுக அதிகரித்துள்ளது.

தேசிய மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாநிலங்களுக்கு 1954 டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த மூன்று மாத காலத்தில், மொத்தம் சுமார் 60 லட்சம் பவுண்டு டி. டி. டி. மருந்துகளும், 250 மருந்து தூவும் சாதனங்களும் விநியோகம் செய்யப்பட்டன.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 13—4—'55 புதன்

நாகரீகந்தானா?

போர்த்துகீசியர் ஆதிக்கத்தி லிருக்கும் கோவா, இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதி என்பதும், அந்தப் பகுதி, அன்னிய ஆதிபத்தியம் ஒன்றின் அரவணைப்பில் இருக்கத் தேவையில்லை என்பதும், தெளிவான உண்மைகள் என்பதை நாம் பன்முறை இங்கு எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

மண்ணாசை கொண்டலையும் போர்த்துகீசிய ஏகாதிபத்தியம், கோவா தன்னிடம்தான் இருக்க வேண்டுமென்பதற்கான நியாயங்களை இதுவரை எடுத்துக்காட்டவில்லை — எடுத்துக்காட்டவும் அதனால் இயலாது. என்றோ தன்னிடம் சிக்கிவிட்ட ஆட்சிப் பொறுப்பைக்கொண்டு, இந்த இருபதாம் நூற்றாண்டிலும்கூட, தனக்குக் கிஞ்சிற்றும சம்பந்தமே இல்லாத ஒரு பகுதியில், தன் ஆதிக்கத்தை என்றென்றைக்குமநிலைநிறுத்திக்கொள்ளலாம் எனக் கனவு காண்கிறது அது.

கோவா — விடுதலை பெற வேண்டிய பூமியின் பரப்பளவில் ஒரு துண்டு.

கோவாவைப்போல, மற்றும் எத்தனையோ துண்டுகள்—உலகத்தின் பல பாகங்களிலும்—ஏற்றங்கொண்டு நிற்கும் ஏகாதிபத்தியங்களின் அரவணைப்பிலே அடிமைக் காடுகளாய் இருக்கின்றன. அங்கெல்லாம் விடுதலை வீரர்கள்—சுதந்திர தாகமெடுத்தோர்—நாட்டுப் பற்றுகொண்டோர்—உரிமைக் குரல் எழுப்பிய வண்ணம் உள்ளனர். ஆம்; உலகில், ஒரு நாட்டினை இன்னொரு நாடு—ஒரு இனத்தை இன்னொரு இனம்—அடக்கி ஆள்வது, ஆகாது—கூடாது; ஒரு நாட்டு மக்கள், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்பவர்களாக — விடுதலை பெற்றவர்களாக— உரிமைகள் மிக்கவராக இருக்க வேண்டும் என்பது, கால வளர்ச்சி, இருபதாம் நூற்றாண்டில் இட்ட கட்டளை. அந்தக் கட்டளையை நிறைவேற்றத் துடிக்கும் விடுதலை விரும்பிகளை, எத்தனை பெரிய எதிரியானாலும் ஏதும் செய்துவிட இயலாது என்பது, முன்னைய வரலாறு கூறியவண்ணமுள்ளது.

இந்த நடைமுறை உண்மையைக் காண மறுத்துவிட்டு, 'என்னையாவது எதிர்ப்பதாவது, என்ன செய்கிறேன் பார்! எங்கே தடி! எங்கே அந்த சுதந்திர மோகிகள்? எங்கே துப்பாக்கி? எங்கே அந்த விடுதலை கோரும் வீணர்கள்?' என்று ஆதிக்கம் கொண்டோர் கொக்கரிப்பது, ஒரு நாட்டு மக்களின் விடுதலை வேட்கையைத் தணித்து அழித்துவிடவும் முடியாது.

கோவாவை விடுதலை செய்ய வேண்டும்; போர்த்துகீசிய ஆதிபத்தியம் அங்கிருந்து அகல வேண்டும் என்று கோரி, பலாத்காரமின்றி அமைதியாக, அறப்போரிலீடுபட்ட கோவா வீரர்களை, போர்த்துகீசிய போலீசார் மிருகத்தனமாகத் தாக்கியதாக செய்திகள் கூறுகின்றன. அதுவும், அறப்போர் தலைவர் ஒரு பெண். அவரையும் அவருடன் இருந்த இரண்டொரு வயது முதிர்ந்த பாட்டிகள் உட்பட பல பெண்களையும், போர்த்துகீசிய போலீசார் கருணை இன்றி, இரக்கமின்றி, தடிகொண்டு தாக்கினராம்.

ஆதிபத்தியங்களின் அடக்குமுறைகள், அட்டகாசங்கள், தடியடி தர்பார்கள், ஒரு அடிமைப்பட்ட நாட்டின் விடுதலைக்காக வீறுகொண்டெழுந்துள்ள வீரர்களை, நிச்சயம் தோற்கடிக்க முடியாது. தடி அடி உடலை — உடலின் உறுப்புகளைத் தாக்கலாம்; ஆனால் உள்ளத்தில் உரம் பெற்று நிற்கும் விடுதலை எண்ணத்தை — சுதந்திர ஆர்வத்தை — நாட்டுப் பற்றினை ஏதும் செய்ய முடியாது என்பதை போர்த்துகீசிய சர்க்கார் உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை.

பெண்களைத் தாக்கும் அவர்தம் பேதமை கண்டு நாம் வருந்துகிறோம்; அவரது மண்ணாசை வெறியினை கண்டிக்கிறோம்.

அந்த 'நாகரிகம்' தெரியாத நாசகாலர்களின் போக்கு கண்டு விடுதலை கோரி நிற்கும கோவா மக்கள், எள்ளி நகையாடிவிட்டு, தொடர்ந்து பயணத்தை நடத்துவார்கள் என்பது உறுதி.

நமது பணி!

திராவிட முன்னேற்றக் கழகம மேற்கொண்டுள்ள பணி—சென்னை சர்க்காரின் நோக்கும் போக்கும் எங்ஙனம் உளது அந்தச் சர்க்காரில் உள்ளவர் நல்லவரா, திறமைசாலியா, நட்பு கோருகிறவரா, சமரசம் பேசுபவரா, சீர்திருத்தவாதியா —என்பதை மட்டும் கவனித்து, அதற்கேற்ப கழகப் பணியின் வகையையும், அளவையும், முறையையும் தீட்டிக்கொள்வதல்ல.

சென்னை சர்க்காரின் வரி செலுத்துவோர்—ஓட்டர்-குடிமக்கள்—என்ற முறையில், அந்தச் சர்க்காரின் போக்கையும் நோக்கையும் கவனித்து, அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்கேற்ற நடவடிக்கை எடுக்கும பொறுப்பு நமக்கு இருக்கிறது; ஆனால், நமது பொறுப்பும, பணியும் அத்துடன் முடிந்துவிடவில்லை. நாம் மேற்கொண்டுள்ள பணி, 'நல்லாட்சி' அமைத்தல் என்பது மட்டுமல்ல—'நமது ஆட்சி' எனும் புனிதமான பணி புரியக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது பணியின் வகை,

(1) ஆரியம் எனும் சமய, சமுதாய அமைப்பு முறையைக் களைந்தெறிந்து பகுத்தறிவு நெறி தழைத்திடச் செய்தல்;

(2) சமுதாய ஒற்றுமையும், பொருளாதார நீதியும் நிலவும் வழிவகை ஏற்படச் செய்தல்;

(3) 'திராவிடர்' எனும் இன உணர்வு ஊட்டுவது;

(4) 'திராவிட நாடு' எனும் நாட்டுப்பற்று ஏற்படச் செய்வது;

(5) அரசியல் எதேச்சாதிகாரத்தையும், பொருளாதாரச் சுரண்டலையும் நோக்கமாகக்கொண்டு புகுத்தப்பட்டுள்ள 'ஏக இந்தியா' எனும் போலித் தத்துவத்தைத் தகர்த் தெறிதல்;

(6) மத்திய சர்க்கார் பிடி எனும் சர்வாதிகாரத்தைச் சாய்த்தொழித்து, (அரசியல் சட்ட திட்டத்தில் காணப்படும் உரிமையின்படி) திராவிடத் தனி அரசு காணுதல்.

இந்தப் பணியினைத் திறம்படவும், வெற்றி கிட்டும்படியும் ஆற்றும் வாய்ப்பு, 'எங்கு இருந்து பணியாற்றினாலும் உண்டு,' என்பதை உணர்ந்திடும் உள்ளப் பக்குவம் பெற்றவர் எவரும், பச்சை கண்டு இச்சை கொள்ளும் பசுப் போக்கிலே நடந்துகொள்ள மாட்டார்கள்!

உள்ளப் பக்குவம் பெறாதவரின் அரசியல் 'உலா'க்கள் எங்கும், எப்போதும், இலட்சிய நோக்குடையாரின் பணியினைக் குலைத்திட முடிந்ததில்லை!

கொதி தாங்காத 'அரிசி' உண்டு, அரசியலில்!

நமது பணி என்றும்போல் நடைபெறும்!

வெற்றி நோக்கிச் செல்கிறோம்—'வெயில்' தாளாதார் கருகி, பிற, 'கொண்டை'க்கு மலராகப் பார்க்கும்போது,புன்னகை புரிவோம் — மேலால் நடப்போம்!

வேலை இருக்கிறது, நிரம்ப!

அணு தாக்குதலை எச்சரிக்கும் இரும்புதீவு

அமெரிக்கக் கடலோரத்தில் அமைக்கப்படுகிறது

அமெரிக்கக் கடலோரத்தில், 'காட்' முனைக்கு 150 கல் தூரத்தில் 6,000 டன் எடையுள்ள 'இரும்புத் தீவு' கட்டப்படுமாம்!

அணு தாக்குதலைப் பற்றிய தகவல்களைத் துரிதமாகத் தந்து எச்சரிக்கை செய்ய உபயோகப்படும் இம்மாதிரியான பல இரும்புத் தீவுகள், அமெரிக்கக் கண்டத்தின் கிழக்குக் கரையில், சங்கிலித் தொடர்போல் கட்டப்பட இருக்கின்றனவாம்!

இந்தத் தீவுகளில் 'ராடர்' சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்குமென்றும், ஒவ்வொரு தீவின் மேல் தளமும், கடல் நீர் மட்டத்திற்கு 87 அடி உயரத்திலிருக்குமென்றும் தெரிகிறது.

நார்போக் எனுமிடத்திலிருந்து நியூ பவுண்லாந்திற் கிடையேயுள்ள 1500 மைல்கள் நெடுக இந்தத் தீவுகள் நிர்மாணிக்கப்படுமாம்.

இத்தீவுகளின் மேல்தளம் கடல் அலைகள் அண்ட முடியாதவாறு கட்டப்படுமாம்.

ஒவ்வொன்றும், 10 அடி விட்டமும், 4,200 அடி உயரமுமுள்ள உருக்குக் குழாய்கள் மீது இவை பொருத்தப்பட்டிருக்குமென்றும், இவை கடலில் ஆழத்திற்குள் தரையில் நன்றாகப் பதிந்தும் இருக்குமென்றும் கூறப்படுகிறது.

50 முதல் 70 பேர் வரையிலும் இருக்கவும், பொழுது போக்கிற்கான ஏற்பாடுகள், 'ஹெலிகாப்டர்' விமானம் இறங்கி ஏறுவதற்கான துறையுடனும் கூடியதாக அமையுமாம்.

தற்போது இதுபோன்ற ஒரு தீவு கட்டும் வேலை ஆரம்பித்தாயிற்று என்றும், கரையோரங்களில் கட்டி முடித்த பின்னரே கடலோர உட்பகுதிகளிலும் கட்டப்படும் என்றும் கூறப்படுகிறது.

காமராசர் ஏமாறவில்லை!

'பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் - கட்டாய இந்திக்கு அவசியமில்லை'

'தென்னாட்டினரை வட நாட்டினர் நிர்ப்பந்தித்ததினாலேயே எதிர்ப்பு'

வடநாட்டினர் மொழிவெறியை முதன் மந்திரி சாடுகிறார்

விருதுநகர், ஏப். 10—

"சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டிய அவசியமில்லை;

"வட நாட்டில் உள்ளவர்கள், தெற்கில் உள்ள சகோதரர்களை இந்தி படிக்க வேண்டுமென நிர்ப்பந்திப்பதினால் தான், தமிழ் நாட்டிலும், தென் பகுதிகளிலும் உள்ளவர்கள் சந்தேகிக்கிறார்கள்."

இவ்வாறு, முதன் மந்திரி காமராசர், இங்குள்ள 'இந்து வாக்குவர்த்தனி சபா'வின் ஆண்டு விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நில வினியோகத்தில் உள்ள சிக்கல்கள்!

கூட்டுறவு முறையின் தோல்வி

அமைச்சர் தரும் விளக்கம்

"நிலப் பிரச்சினை முக்கியமான ஒரு பிரச்சினையாகும்; நிலம் சாகுபடிக்குத் தேவை என்பதை சர்க்காரும் நன்றாக உணர்ந்தே இருக்கிறது; எனினும், சர்க்கார் உத்திரவிட்டாலும்கூட, அதிகாரிகள் அதனை சரியாக நடத்தவில்லை என்று தெரிகிறது; யுத்த காலத்தில் உணவு நெருக்கடி ஏற்பட்டபோது,உணவு உற்பத்திக்கு நிலத்தைச் சாகுபடி செய்ய உத்திரவிட்டனர்; பின்னர் யுத்தம் நின்று, உணவு நெருக்கடியும் தீர்ந்ததும் நிலத்தைச் சாகுபடி செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்று சர்க்கார் உத்திரவிட்டது; சர்க்கார் உத்திரவின்மேல், சட்டப்படி நிலத்தை அவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தும், அந்த நிலங்களைத் தங்களுக்கே தந்துவிட வேண்டுமென்று விவசாயிகள் வாதிடுகின்றனர்; இந்த நிலங்களையெல்லாம், காட்டிலாகா அமைச்சரைக் கலந்து சாகுபடி செய்ய விவசாயிகளிடம் சர்க்கார் ஒப்படைத்தது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சாகுபடிக்கு விடப்பட்டது; இதன் மூலம் முன்பு உழுது வேலை செய்தவர்களுக்கு மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருந்தவர்களுக்கும் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டது; இது விவசாயிகளுக்குப் பிடிக்காமல் தங்களுக்குத் தனிப் 'பட்டா' முறைதான் வேண்டுமென்று கேட்கிறார்கள்

"பிற நாடுகளிலெல்லாம்கூட்டுறவு இயக்கங்கள் வெற்றி கண்டுள்ளன என்று நிபுணர்களனைவரும் கூறுகின்றனர்; ஆனால், நமது நாட்டிலோ அவை வெற்றி பெற்றுள்ளன என்று கூறிவிடுவதற்கில்லை; இங்கு, 'தனிப் பட்டாதான் நியாயம்' என்று கூறுகிறார்கள்; அவர்கள் மட்டுமல்லாமல் சர்க்காரும் அவ்வாறே கருதுகின்றனர்.

"சர்க்கார் செய்யும் சட்டங்களை ஏற்று, அவற்றின் நோக்கத்தை அறிந்து அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டும்; நிலமற்றோருக்கு நிலம் வழங்கப்பட வேண்டுமென்பதுதான் சர்க்காரின் அடிப்படைக் கொள்கையாகும். கூட்டுறவு இயக்கத்தைப் பலவந்தமாகத் திணித்து நிறைவேற்ற வேண்டுமென சர்க்கார் விரும்பவில்லை,"

இவ்வாறு சென்னை மாநில நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர், பவானிக்கு 20 கல் தொலைவிலுள்ள புதுக்காடு எனும் கிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அங்குள்ள விவசாயிகள் சங்கத்தவர், ரூ. 10க்கும் குறைவான வருமானமுள்ளவர்களுக்கும், நிலத்தைச் சாகுபடி செய்துவந்தவர்களுக்கும் நிலத்தை 'பட்டா' செய்து கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவரிடம் கோரிக்கை ஒன்று தந்திருக்கின்றனர். அக்கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்.

மேலும் அவர், ஆத்தூரிலுள்ள 40,000 ஏகர் நிலத்தில் 30,000 ஏகர் நிலம் அங்குள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் வினியோகம் செய்யப்பட்டுள்ளதென்றும், சாகுபடி செய்வதற்கென சர்க்கார் விதித்துள்ள தண்டத் தீர்வையைத் திரும்பிப் பெற்றுக்கொண்ட உத்திரவு இன்னும் தங்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை என்று கூறப்படுவது வருந்தத்தக்கது என்றும், நிலத்தைப் பிரித்து வழங்குவதில் சர்க்கார் இன்னும் அதிகப்படியான சிப்பந்திகளை நியமிப்பர் என்றும் தெரிவித்திருக்கிறார்.

'கைத்தறியின் தரம் உயர வேண்டும்'

காமராசர் கருத்து

"கைத்தறி ஆடைகளின் 'தரம்' எப்பொழுதும் உயர்ந்ததாகவே இருக்க வேண்டும்; மில் துணிகள் உற்பத்தியை சர்க்கார் தடை செய்தாலும் கூட அதனால் எவ்வித பலனும் ஏற்பட்டுவிடாது; அதுபோலவே 40 - லட்சம் விசைத் தறிகளுக்கு வரி விதிப்பதின் மூலம் கைத்தறிக்கு உதவி அளிக்கலாம்; எனினும் தறிகளின் நிலை அதிகரித்தால் சர்க்காரின் நிலை என்னவாகும் என்பதையும் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது; எனவே, நெசவாளர்கள் தங்கள் தயாரிப்பின் 'தரத்'தை உயர்த்தி, அதையே நிலைத்திருக்கச் செய்ய வேண்டும்."

இவ்வாறு, சென்னை முதலமைச்சர் காமராசர், அருப்புக் கோட்டை தாலுகா நெசவாளிகள் இரண்டாவது மாநாட்டின்போது பேசினார்.

இந்தியாவில், அந்நியர் நிர்வாக அதிகாரத்துக்குட்பட்ட கம்பெனிகளில் வேலை பார்த்து வந்தவர்களில், இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை 1952-ல் 65.3 சதவிகிதமாக இருந்தது—1954 ஜனவரி 1-ந் தேதியன்று 70.6 சதவிகிதமாக அதிகரித்திருந்தது.

பட்டினியிலிருந்து தப்ப குறள் படித்தாராம்!

ஒரு கல்வி அதிகாரி குறள் கற்ற விந்தை!

விளாத்திகுளம், ஏப். 10—"நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது தினம் ஒன்றுக்கு 5 குறட்பாக்கள் வீதம் பாராமல் படித்து எனது தகப்பனாரிடம் ஒப்புவிக்க வேண்டும்; அப்படிச் செய்தால்தான் எனக்கு சாப்பாடு; ஒப்புவிக்காவிட்டால் அன்று எனக்குச் சாப்பாடே கிடையாது. இவ்விதமாக நான் 10-வது வகுப்பு படிக்கும்போது திருக்குறளிலுள்ள எல்லாப் பாக்களையும் படித்து முடித்துவிட்டேன்."

இவ்வாறு, நெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி கே. வெங்கட சுப்பிரமணியம் எட்டயபுரத்தை அடுத்துள்ள விளாத்திகுளம் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி திருவள்ளுவர் கழகத்தின் விசேடக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினாராம்!

"திருக்குறளை பள்ளிக்கூடச் சுவர்களிலும், பொது இடங்களிலும் எழுதி விடுவதால் மட்டும் எவ்வித பயனும் கிடைக்கப் பெறாது; அக்குறளை வாழ்க்கையிலும் பயன்படுத்த வேண்டும்; ஆங்கில மொழியில் கடிதம் எழுதுவது, பேசுவது ஆகியவற்றைத் தவிர்த்து அதற்குப் பதிலாக சுத்தமான—அழகான இனிய தமிழில் எழுத வேண்டும்; திருக்குறட்பாக்கள் அனைத்தையும் கற்றல் வேண்டும்" என்று அவர் மேலும் கூறிவிட்டு, "ஒவ்வொருவரும் தினம் ஒன்றுக்கு 5 குறட்பாக்களாவது மனப்பாடம் செய்து வர வேண்டும்," என்று கேட்டுக் கொண்டார்.

ஆன்ம வளர்ச்சிக்கு அடிகோல வேண்டுமாம்!

கல்வியின் நோக்கம் பற்றி இராதாகிருஷ்ணன்

"'ஆன்ம' வளர்ச்சி ஏற்படாவிட்டால் விஞ்ஞானத்தின் சாதனைகள் எல்லாம் மனித வர்க்கத்திற்குத் தீமையாக அமையும்.

"அணுசக்தி மனிதன் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; நாம் அதை மனித வர்க்கத்தின் நன்மைக்கு உபயோகிக்கப் போகிறோமா அல்லது மனிதனின் அழிவுக்குப் பயன்படுத்தப் போகிறோமா என்பது அந்தச் சக்தியைப் பொறுத்த விஷயமல்ல; ஆனால், அதை வெளிப்படுத்தும் மனிதர்களின் தன்மையைப் பொறுத்தது;

"உலகம் இன்று 'குறுகி' விட்டது. இனி சிறிது சிறிதாக, மனது விசாலமடைய வேண்டும்;

"எண்ணங்களை மனத்தில் திணிக்க வேண்டிய தனித்தனி நபர்களாக, மாணவர்களைக் கருதக் கூடாது; மலரும் மலர் போன்ற உள்ளம் படைத்தவர்களாக அவர்களைக் கருத வேண்டும்;

"புதிய உலகில் புகும், ஆன்மாவின் தோட்டமாகக் கல்வியின் நோக்கம் இருக்க வேண்டும்;

"இந்த இயற்கை உலகில் நாம் தோன்றியிருக்கிறோம்; ஆனால் உலகத்தில் சந்தர்ப்ப வசமாகப் புகுத்தப்பட்ட ஒரு சம்பவமாக, மனிதனைக் கருதக்கூடாது,"

என்று குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன், அரித்துவாரில் உள்ள 'குருகுல விஸ்வ வித்யாலய' பட்டமளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசீயத் 'தியேட்டர்'

டில்லி நகரில் தேசீயத் 'தியேட்டர்' ஒன்று கட்டும் எண்ணத்துடன் இந்தியப் பேரரசு இருப்பதாகவும், இதற்கு சுமார் ரூ. 75 லட்சம் செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருப்பதாயும் மக்கள்சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கல்வி இலாகா செயலாளர் தகவல் தந்துள்ளார்.

இறக்குமதியாகும் 'ஆபாசங்கள்'!

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆபாச நகைச்சுவைப் பிரசுரங்களைத் தடை செய்வது பற்றி இந்தியப் பேரரசு யோசித்து வருவதாயும், இதுபற்றி ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

ஐ. சி. எஸ். அய்யரின் அப்பீல் மனு

டில்லி விசேட நீதிபதி அளித்த தீர்ப்பை எதிர்த்து, இலஞ்சக் குற்றச்சாட்டு வழக்கில் ஈடுபட்ட எஸ். ஏ. வெங்கடராமன் எனும் ஐ. சி. எஸ். அதிகாரியின் 'அப்பீல் மனு' இத்திங்கள் 18-ந் தேதியன்று பஞ்சாப் உயர் நீதிமன்ற சர்க்யூட் பெஞ்சு முன்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமாம்.

ஆச்சாரியாரின் அரிய யோசனை!

'ஆத்மார்த்த' ஆயுதத்தால் அணுகுண்டு தாக்குதலை சமாளிக்கக் கோருகிறார்

"அணு ஆயுதங்கள் தயாரிப்பு படிப்படியாக தற்போதிருந்து வரும் நிலையைவிட இலகுவான ஒன்றாக மாறிவிடும்போது, நம்மை யாரும் அணுசக்தி ஆயுதங்களைக் கொண்டு தாக்கமாட்டார்கள் என்று உறுதிகூற முடியாது; அவைகளுக்கு சர்வதேசத் தடை விதிப்பதினால் கூட இந்த ஆபத்து நீங்கிவிடும் என்று சொல்லிவிட முடியாது; எனவே, இம்மாதிரி அணுகுண்டுத் தாக்குதலை எதிர்த்து நிற்க இந்தியா, 'தர்மம்' என்ற தன்னுடைய ஆயுதத்தையும், ஆத்மீக பலத்தையும் மழுங்க விட்டுவிடாமல் பேணிக் காத்து வர வேண்டும்."

இவ்வாறு சென்னை முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார் செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கழகச் செய்திகள்

சென்னை—சூளை தி. மு. க.

10—4—55 காலை 10 மணியளவில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டு, புதிய நிர்வாகிகளிடம் பொறுப்பனைத்தும் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், பள்ளிக் குழுத் தலைவராக தோழர் மு. கன்னியப்பனும், படிப்பகக் குழுத் தலைவராக தோழர் இராசசேகரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழக 5-ம் ஆண்டு விழாவை இம்மாதம் 23-ந் தேதிக்குள் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை 23-வது வட்ட தி. மு. கழகம்

3—4—55 காலை 10 மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், திருவல்லிக்கேணி கழகத் தோழர் இராகவன் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்ட பின்னர் மே தின விழாவை சிறப்புடன் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற்குழு

20—3—55ல் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயற்குழு கூட்டத்தில், அண்மையில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டு வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. மொத்த வரவு ரூ 6,836—8—0; மொத்தச் செலவு ரூ 6,543-10-0; மீதி ரூ. 312—14—0. இத்தொகையை மாவட்டக் கழகப் பொருளாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், முதல் மாநாட்டுக் கையிருப்புத் தொகையை இதனுடன் சேர்த்துக் கழகத்திற்கென சொந்தக் கட்டிடம் வாங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி மாவட்ட தி. மு. க.

25—3—55 காலை 11 மணிக்கு, திருச்சி சிந்தாமணி தி மு. கழக அலுவலகத்தில், தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, கல்லக்குடி அறப்போர், மற்றும் கழக அறப்போரில் உயிர் துறந்தும், சிறை சென்று திரும்பியுமுள்ள வீரர்களுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டும், திருச்சி மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டு வரவு-செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டும், மேற்படி மாநாட்டின் மீதி இருப்புத் தொகையையும், மாவட்டக் கழகத்தின் நாளதுவரை உள்ள வரவு-செலவு கணக்குகளை சரிபார்த்து ஒப்புக்கொண்டும் முடிவுகள் செய்யப்பட்டன. கூட்ட இறுதியில், மாவட்டச் செயற்குழுவினரைப் பாராட்டி பல தோழர்கள் நன்றியுரை கூற, மாவட்டச் செயலாளரும், துணைச் செயலாளரும், தங்களோடு ஒத்துழைத்து வேலைகளை வெற்றிகரமாக நடத்தித் தந்த மாவட்டப் பிரதிநிதிகளுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்து, எதிர்காலத்தில் கழகம் நல்ல முறையில் பணியாற்ற எல்லா தோழர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். தோழர் ஏ. நடராசன் அவர்களால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டு கூட்டம் முடிந்தது.

சேவூர் (வ. ஆ.) தி. மு. க.

2—4—55 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் புதிய செயற்குழு தோழர் எஸ். ஏ. கைலாசன் தலைமையில் நடைபெற்றபோது, மார்ச் மாத வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுன், 11—6—55 அன்று நடைபெறும் கழக ஐந்தாம் ஆண்டுவிழாவின்போது, 'தூக்குமேடை' நாடகம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

எண்கண் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

4—4—55 மாலை 6 மணியளவில், கடைவீதியில், தோழர் கிருட்டிணமூர்த்தி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் பேசியபின், தோழர் இரா. நெடுஞ்செழியன் "திராவிட நாடு" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். பின்னர், ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆலத்தம்பாடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

6—4—55 மாலை 6 மணிக்கு, பஸ் நிலையத்திற்கருகில் தோழர் ஆர். இலக்குமணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். எம். சுல்தான் ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கியும் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

திண்டிவனத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

2—4—55ல் திண்டிவனம் தி மு. கழகச் சார்பில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டத்தினால் திராவிட நாட்டிற்கு ஒருவித பயனும் இல்லை என்பதை விளக்கிப் பேசப்பட்டது.

மாதவரம் தி. மு. கழகம்

3—4—55 காலை 10 மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், வருகிற மே மாதத்தில் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், மற்றும் கிளைக் கழக வளர்ச்சி குறித்துச் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சிவகெங்கை தி. மு. கழகம்

7—4—55 இரவு 10 மணிக்கு, பாண்டியன் படிப்பகத்தில் நடைபெற்ற கழகச செயற்குழுக் கூட்டத்தில், 14—5—55ல் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நடப்பு ஆண்டில், பருப்பு வகைகள் சாகுபடி விஸ்தீர்ணம் 94,86,000 ஏக்கராவாக இருக்குமென்று தெரியவருகிறது.

*** ***

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்

கண்டனத் தாள்

ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரால் இந்திய சர்க்கார் நடத்தியுள்ள அக்கிரமத்தைக் கண்டித்துப் பொதுமக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்ட, கண்டனத் தாள் அச்சாகி இருக்கிறது.

இரு வண்ணங்களில், படத்துடன், லித்தோ முறையில் அச்சாகியுள்ள இந்தத் தாள்கள் எல்லா கிளைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

தோழர்கள், இந்தத் தாள்களை, சேதமாகாத முறையில் பயன்படுத்த வேண்டுகிறோம்.

கண்டபடி சுவர்களில் ஒட்டி விடுவதைக் காட்டிலும், கழகப் பணிமனைகள், கழகத் தோழர்களின் இல்லங்கள், கடைகள் ஆகிய இடங்களில் தாளை அட்டையில் ஒட்டித் தொங்கவிட்டு வைப்பது பயனளிக்கும்.

அதிகமான நாட்களுக்கு இந்தத் தாள்களைப் பொதுமக்கள் பார்வையில் படும்படியான முறையில் பயன்படுத்த வேண்டுகிறோம்.

சந்தைகள் நடக்கும் இடங்களில் தாள்களை அட்டைகளில் ஒட்டி எடுத்துக் கொண்டு, தொண்டர்கள் சென்று வரலாம்; திருவிழாக்களிலே வேண்டாம்.

தி. மு. கழகம்—
தலைமை நிலையம்

*** ***

திருமணங்கள்

மா. இராமச்சந்திரன் — ஜானகி

11—4—55 காலை 9½ மணியளவில், காஞ்சிபுரத்தில், தோழர் திருநாவுக்கரசு இல்லத்தில், தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில், தோழர் மா. இராமச்சந்திரன் — தோழியர் ஜானகி அம்மையார் திருமணம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், மணமக்கள், வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழி கூறி மாலை சூட்டிக்கொண்டனர். தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, வா. தி. மாசிலாமணி, பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் கண்ணப்பா தலைமையில், மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்திதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது—பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

மாணிக்கம்—வனசாட்சி

'திராவிட நாடு' இதழ் அச்சுப் பொறி இயக்குபவரான தோழர் மாணிக்கம்—தோழியர் வனசாட்சி திருமணம், 11—4—55 காலை 11½ மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது; மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தைப் படித்து, உறுதிமொழி கூறி, மலர் மாலை சூட்டிக் கொண்டனர். மணமக்களைப் பாராட்டி தோழர்கள் ஈழத்து அடிகள், சம்பந்தம், இராம. அரங்கண்ணல், சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி, அ. பொன்னம்பலனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தோழர்களால் மணமக்களுக்கு வாழ்த்து மடல்களும், பரிசுகளும், அறிவு நூல்களும் வழங்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

அர்த்தநாரி — பூங்காவனம்

11—4—55 காலை 9 மணிக்கு, காஞ்சிபுரம் ஜவுளிக்கடை சத்திரத்தில், தோழர் ஈழத்து அடிகள் தலைமையில் தோழர் அர்த்தநாரி—தோழியர் பூங்காவனம் திருமணம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், மணமக்கள் திருமண ஒப்பந்த உறுதிமொழி கூறி, மலர் மாலை சூட்டிக்கொண்டனர். தோழர்கள் டி. சபாபதி, வெங்கடேசன், இராம அரங்கண்ணல், கே. டி. எஸ். மணி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

ஆறுமுகம்—அசோதை

7—4—55ல், மதுரை பங்களா இல்லத்தில், தோழர் பூ. கணேசன் தலைமையில், வடக்கு மாசி வீதி தோழர் ஆறுமுகம் — தோழியர் அசோதை அம்மையார் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, தோழர்கள் எஸ். முத்து, எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, இர. இ. ரெங்கசாமி ஆகியோர் பேசினர்.

இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கருணாநிதி நாடக மன்றம் திறப்பு விழா

அய்யர்பட்டியில் 5—3—55ல் மேற்படி மன்றத் திறப்பு விழா தோழர் சி. பி அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. எழிலரசு நாடகம் என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், சுமார் 204 கோடி மக்கள் வாழும், 32,957 கிராமங்கள் அடங்கிய 220 வட்டாரங்கள் தற்போது உள்ளன.

விற்பனை வரியை எதிர்த்துக் கிளர்ச்சி

போலீசார் தடியடிப் பிரயோகம்

6 பேருக்கு காயம்; 16 பேர் கைது

ஜெய்ப்பூர், எப். 11—

விற்பனை வரியை எதிர்த்து நடைபெறும் கிளர்ச்சியின்போது, கலகம் விளைவித்த கூட்டத்தினர் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததால் 6 பேர் காயமுற்றனராம்; கலகத்தையொட்டி 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

கூட்டத்தினர் கற்களை வாரி வீசியதின் விளைவாக 6 போலீசாரும் காயம்பட்டனராம்.

இக்கலவரம் நடைபெறுகையில் அருகிலிருந்த ஒரு கடையும் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜெய்ப்பூரில் ஏற்கனவே தடையுத்தரவு அமுல் நடத்தப்பட்டு வந்தது.

இராஜஸ்தான் சட்டசபைத் தலைவர் சென்று கொண்டிருந்த காரை சிலர் கூட்டமாகச் சென்று வழி மறித்து; காரில் இருந்த தேசியக் கொடியைப் பிடுங்கிக் கிழித்தெறிந்தனராம்.

முதலமைச்சரின் சமாதானம்!

விற்பனைக்கு எதிராக அவர்களுக்குள்ள குறைபாடுகளை நீக்க, சர்க்கார் அதனை அனுதாபத்துடன் கவனிக்குமென்று இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் வர்த்தகர்களுக்கு உறுதி கூறியிருக்கிறார்.

தொழிலாளர் மீது போலீஸ் தடியடி

15,000 பேர் வேலை நிறுத்தம்

அமிர்தசரஸ், எப். 11—

இந்நகருக்கு அருகில் உள்ள துணி ஆலைத் தொழிலாளருக்கும், போலீசாருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக 16 போலீஸ்காரர்களுக்கும் 7 - தொழிலாளர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

அங்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை மீறி தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினதே இதற்குக் காரணம் என்றும், ஊர்வலத்தைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்யவே, தொழிலாளர்—போலீசார் கைகலப்பு ஏற்பட்டதென்றும் தெரிகிறது. இதுவரையிலும் இதுபற்றி 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

மேற்படி தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபிக்கும் வகையில், அமிர்தசரசிலுள்ள ஆலையொன்றில் 15,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனராம்.

காங்கிரஸ் — கம்யூனிஸ்டு கைகலப்பு

9 பேர் மருத்துவ மனையில்; 10 பேர் கைது

திருச்சூருக்கருகில் காசிக்கோடி என்னும் இடத்தில்; காங்கிரஸ்—கம்யூனிஸ்டு ஊழியர்களிடையே ஏற்பட்ட ஒரு கைகலப்பின் விளைவாக 6 கம்யூனிஸ்டு பெண்களும், 3 காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆண்களும் காயமுற்று மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு மாலை காங்கிரஸ்காரர்களின் ஊர்வலம் ஒன்று சென்று கொண்டிருக்கையில் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சில பெண்மணிகள் ஊர்வலத்தினர் மீது வெந்நீரை ஊற்றினதாகவும்; இதனைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாகப் போலீசார் 10 பேரைக் கைது செய்து கொண்டு மேலும் புலன் விசாரணை நடத்துவதாகவும் தெரிகிறது.

விபத்துக்குள்ளான 'காஷ்மீர் இளவரசி'

6 பேர் தப்பினர்; மீட்பு வேலை தொடர்கிறது

பம்பாய், எப் 12—

நேற்று முன் தினம் பாண்டுங் நகருக்குச் சென்று கொண்டிருக்கையில் விபத்துக்குள்ளான 'ஏர் இந்தியா' கம்பெனியின் 'காஷ்மீர் இளவரசி' என்ற விமானத்திலிருந்தவர்களில் 6 பேர் மீட்கப்பட்டனர் என்று தெரிகிறது.

விமானத்தில் மொத்தம் 11 பிரயாணிகளும், 9 சிப்பந்திகளும் இருந்தனர்.

முதலில் மீட்கப்பட்ட மூவர் ஏற்கனவே சிங்கப்பூர் வந்துவிட்டதாயும், எஞ்சிய மூவரை ஒரு கப்பல் மீட்டதென்றும் தெரிகிறது. அவர்கள் பலத்த காயம்பட்டனர் என்று கூறப்படுகிறது.

விபத்து பற்றி பூரண விசாரணை நடத்தப்படுமென இந்திய சர்க்கார் அறிவித்துள்ளது.

காணமற்போன அந்த விமானத்தின் சேதக்குவியல், கிரேட் நடோனா தீவுக்கருகில் கண்டுபிடிக்கப்பட்டது.

இத்தீவு சிங்கப்பூருக்கு வடகிழக்கில் 250 மைல் தொலைவில் இருக்கிறது.

விபத்துக்குள்ளான, அந்த 'காஷ்மீர் இளவரசி'யின் விலை 72 லட்சம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது.

ஏர் இந்தியா கம்பெனியாரின் கான்ஸ்டலேஷன் விமானத்திற்கு ஏற்படும் விபத்திற்கு இது இரண்டாவதாகும்.

ஸ்விட்சர்லாந்தில், 'மான்ட் பிளாங்' சிகரத்தில் 'ஏர் இந்தியா கான்ஸ்டலேஷன்' விமானமொன்று முன்பு நொறுங்கியது; காஷ்மீர் இளவரசி இரண்டாவது முறை விபத்துக்குள்ளான விமானமாகும்.

இந்த விமானம் சீனப் பிரதிநிதிகளை பாண்டுங்கில் இறக்கி விட்டு, இரங்கூனுக்கு வரவேண்டும் என்றும், அங்கிருந்து இந்தியப் பிரதமர் நேரு, எகிப்து பிரதமர் கர்னல் நாசர், பர்மா பிரதமர் யூ - நூ ஆகியோரை ஏற்றிச் செல்லவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்!

காவல் உத்தரவு ரத்து!

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ள மீர் இலாகி பக்ஷ், காஜி பஸ்லுல்லா மீதும் அப்துஸ் சத்தார் மீதும் பிறப்பித்திருந்த 'காவல்' உத்தரவுகளை சிந்து சர்க்கார் ரத்து செய்துவிட்டது.

அப்துஸ் சத்தார், மத்திய சர்க்கார் ஆட்சியிலுள்ள கராச்சியில் இருப்பதால், கைது செய்ய உத்தரவு பிறப்பித்தும்; அவ்வுத்தரவை அமுல் செய்ய முடியவில்லை.

தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ், 4.18 கோடி மக்கள் வாழும் 66,335 கிராமங்கள் அடங்கிய 603 வட்டாரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

★★★★★★ ★★★★★★★★★★★

பெரியகுளம் (மதுரை மாவட்டம்) நெல்லையப்பர் கலா நிலைய பள்ளிக்கூட்டு உதவி நிதிக்காக

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும்

'இன்பக் கனவு'

நாடகம்

16—4—55 கரூர்: டாக்கி டாக் தியேட்டரில்

17—4—55 மணப்பாறை: கனி திறந்த அரங்கில்

19—4—55 பெரியகுளம்: குமாரவேல் அரங்கில்

நடைபெறும்

"கல்வி நிதிக்கான இந்த நற்பணிக்கு அன்பர்கள் ஒத்துழைப்பு நல்கி வெற்றி தரக் கோருகிறேன்," என்று அமைப்பாளர் தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி கோருகிறார்.

★★★★★★★★★★★★★★★★★

பாராட்டு விழா

சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளையவர்களது 'தமிழின்பம்' என்ற நூலைப் பாராட்டி, இந்திய அரசாங்கம் பரிசு வழங்கியது குறித்து; 18—4—55 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு, சென்னை அண்ணாமலை மன்றத்தில், முதலமைச்சர் காமராசர் தலைமையில் ஒரு பாராட்டு விழா நடைபெறும். ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் பேராசிரியருக்கு பொன்னாடை போர்த்துவார். அமைச்சர் பக்தவத்சலம், திருப்புகழ் மணி, பேராசிரியர்களான தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அ. சீனிவாசராகவன், ஜி. சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

கழகக் கூட்டம்

★

திருத்துறைப்பூண்டி
15—4—55 வெள்ளி மாலை
பேசுபவர்:
நாஞ்சில் கி. மனோகரன்

திருச்சி நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

16—4—55 இரவு 10 மணிக்கு, திருச்சி நகர தி. மு கழக செயற் குழுக் கூட்டம், திருச்சி, பெரிய கடை வீதி, தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும். அதுசமயம் மே தினக் கூட்டம் நடத்துவது பற்றியும், கழக வேலைத் திட்டம் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

மக்கள் முன்னேற்ற மன்ற திறப்பு விழா

14—4—55 மாலை 5½ மணிக்கு; சென்னை, புரசை, குயப்பேட்டை' அருணாசல பண்டாரம் தெருவில், தோழர் எஸ். பக்கிரிசாமி (பிள்ளை) தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, பே. தா. இளமொழி ஆகியோர் பேசுவர்.

அமைச்சர் தரும் அரிய யோசனை?

"கம்யூனிஸ்டுகளால் ஏற்படும் ஆபத்தைக் கிள்ளியெறிவது எப்படி என்பதுதான் மலையாளத்தை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை; ஜனநாயக ஐக்கியத்தில் நம்பிக்கை கொண்டுள்ள எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டினால் இதனை செய்து முடித்துவிடலாம்," என்று, சென்னை மாநில, கிதி; கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கள்ளிக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார்.

பாகிஸ்தானில் குழப்ப நிலை?

பெடரல் கோர்ட் தந்த தீர்ப்பின் விளைவு

அவசரச் சட்டம் பிரகடனமாகுமென அறிவிப்பு

"பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் மேற்கொண்ட நெருக்கடி கால அதிகாரங்களின் கீழ், கலைக்கப்பட்ட பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய 35 சட்டங்களைச் செல்லுபடியாக்குவதில் அவருக்கு விசேட அதிகாரம் எதுவும் கிடையாது," என்று, பாக். பெடரல் கோர்ட் தீர்ப்பளித்துவிட்டது.

"பெடரல் கோர்ட் அளித்த இத்தீர்ப்பின் காரணமாக, நாட்டின் சட்ட நிர்வாகம் முறிவடையாமல் தடுப்பதற்கு ஓர் அவசரச் சட்டத்தை கவர்னர் - ஜெனரல் பிறப்பிப்பார் என்று நம்பப்படுகிறது.

இத்தீர்ப்பின் விளைவாக, மாநில சட்டசபைகள் அனைத்தும் சட்ட விரோதமானதாகிவிடும்; பாக். சர்க்கார் பாங்கியின் அதிகாரம் ரத்தாகும்; பிரிவி கவுன்சிலுக்கு மீண்டும் அதிகாரம் அளிக்கப்படும்; 'தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன்' அமைப்பதற்கு அதிகாரமளித்த சட்டம் செல்லாததாகிவிடும்.

தீர்ப்பு வெளியானதும் மந்திரி சபை அவசரமாகக் கூடி மந்திராலோசனை நடத்தியது; சர்க்கார் கட்சித் தலைவர்கள் சட்ட நிபுணர்கள் நிலைமை பற்றி ஆலோசிக்கக் கூடினர்; பங்கு மார்க்கெட், கோர்ட்டுகள், சர்க்கார் காரியாலயங்கள் ஆகியவற்றில் குழப்பம் நிலவியது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை-6 55

மாவட்டப் பிரதிநிதி

சிற்றூர்—பேரூர் (சிறிய-பெரிய பஞ்சாயத்து) கிளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாவட்டப் பிரதிநிதியைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். சில கிளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. அவர்களில் முதலில் காணப்படும் ஒருவருக்குத்தான் மாவட்டப் பிரதிநிதிச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அறிவகம்" சென்னை
31—3—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★

பண்டார வீரமுத்து விளம்பரம் பெற்றார்!

சென்னை, எப். 12—

விதிக்கப்பட்டிருந்த தடை உத்திரவை மீறி, சட்டசபைக் கட்டிடத்தின் அருகில் ஊர்வலம் நடத்த முயற்சித்து, கலவரம் உண்டாகக் கூடிய முறையில் நடந்துகொண்டதாக விபூதி வீரமுத்து சாமியார் மீது தொடரப்பட்ட வழக்கில், இன்று, சென்னை 5-வது மாகாண மாஜிஸ்திரேட், ரூ. 50 அபராதமும்; அபராதம் கட்டத் தவறினால் இரண்டு வாரக் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக் கூறினார். மற்றும் அவருடனிருந்த ஜம்பு என்பவருக்கும் ரூ. 10 அபராதமும், கட்டத் தவறினால் 1 வாரக் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 142 லட்சம் மணங்கு மீன் பிடிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் சுமார் 100-லட்சம் மணங்கு கடலிலிருந்து கிடைக்கிறது.

நெல் விலை சரிவைத் தடுக்க!

மத்திய அரசாங்கத்திடம் முறையீடு

சென்னை, எப். 11—

"சர்க்கார் கைவசமுள்ள நெல் இப்போது விற்பனைக்கு வெளிக்கொணரப்பட்டால், நெல் விலையில் மிகப் பயங்கரமான வீழ்ச்சி ஏற்படும்,"

என்று, சென்னை வி. கே. இராமசாமி எம். எல். ஏ, அகில இந்திய விவசாயிகள் மாநாட்டில் மத்திய உணவு மந்திரி எம். வி. கிருஷ்ணப்பாவைச் சந்தித்து எடுத்துக் கூறியிருக்கிறாராம்.

"விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளாகாதவகையில் ஏராளமான அளவு, நெல்லை மாநில சர்க்கார் கொள்முதல் செய்வதற்கு, மத்திய அரசாங்கம், உதவியளிக்கவேண்டும்,"

என்றும், அவர் எடுத்தியம்பியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

வட நாட்டில் கோதுமை விலை வீழ்ச்சி!

இந்தியாவில் கோதுமை அதிகமாக விளையும் மாநிலங்களுக்கு—அங்கு விளையும் கோதுமையின் விலை வீழ்ந்து வருவதைத் தடுக்கும் நோக்குடன்—மத்திய சர்க்காருக்காக அந்தக் கோதுமையை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்காக—சுமார் ரூ 12 கோடி வரை முன்பணம் தர இந்தியப் பேரரசு முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

உ. பி பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான், மத்திய பாரத், மத்திய பிரதேஷ், போபால், பம்பாய், பீகார் ஆகிய வட மாநிலங்களின் உணவிலாகா காரியதரிசிகளின் கூட்டம் ஒன்றைத்தொடர்ந்து இந்தியப் பேரரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய அரசாங்க உணவிலாகா காரியதரிசி, பி. என். தாபர், இதற்கு முன்பே சர்க்கார், கோதுமை விலை வீழ்ச்சியைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்கிவிட்டு, எந்த ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் விலை வீழ்ந்துவிட்டால் நஷ்டம் என்று கணக்கிடப்படுகிறதோ அந்தக் குறிப்பிட்ட அளவு விலைக்கு கோதுமையைக் கொள் முதல் செய்ய சர்க்கார் சம்மதித்திருப்பதாகவும் கூறினார்.

அதாவது மணங்கு ஒன்றுக்கு ரூ. 10 வீதம் விவசாயிகளின் 'மண்டி'களிலிருந்து கோதுமை வாங்குவதென அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

பெயர் சூட்டல்

காஞ்சீபுரம் 'கோல்டன் டூ கிளப்' உரிமையாளரான தோழர் ஜெகதீசனின் ஆண் மகவுக்கு, காஞ்சீபுரம் 'மறுமலர்ச்சிக் கழக' ஆண்டு விழாவின்போது, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 'வீரமணி' என்று பெயரிட்டார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.